## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 248/2017 | Date : 13.02.2024 | PW1 |
|---|---|---|
| Name: சந்திரசேகரன் | S/o. **வைத்தியலிங்கம்** | |
| Evidence Recorded Time: 4.05 P.M. to 4.25 P.M | | |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

ச.எண்.4/1 ல் பு.ஏக்.5.30 நிலமானது 1974ம் ஆண்டு மேட்டூர் தாசில்தார் மூலம் பட்டா எண்.1431ல் சின்னுகவுண்டர்மகன் வைத்திகவுண்டர் என்கிற பொன்னப்பன் என்பவருக்கு D card பட்டா மூலம் வழங்கப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் கொடுத்திருக்கலம். அப்போது அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தார்கள். வைத்திகவுண்டர் என்ற பொன்னப்பம் இந்த வழக்கில் உள்ள 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் என்றால் சரிதான். ச.எண்.4.1ல் எனக்கோ, வேறு நபர்களுக்கோ பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் சரியல்ல. பட்டா வழங்குவதற்கு முன்பே புறம்போக்கு நிலமாக இருந்து D Card பட்டா மூலம் என் தாத்தா தைலப்பனுக்கு கொடுத்தார்கள். ச.எண்.4/1சில் 0.42.00 ஏர்ஸ், ச.எண்.4/1ஜி-ல் 0.40.50 ஏர்ஸ் நிலமும் ச.எண்.6/1ல் 0.42.00 ஏர்ஸ் நிலம் பு.ஹெக்.1.24.50 நிலமானது என் தந்தை வைத்திலிங்கம் பெயரில் பட்டாஇருப்பதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாத்தா பெயரில் இருந்து என் தந்தை பெயருக்கு மாறியுள்ளது. ச.எண்.4/1இ யை தான் நான் தவறாக 4/1சி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ச.எண்.1சி மற்றும் 1 ஜி யை பொறுத்து தனிப்பட்ட முறையில் என் அப்பா பெயருக்கு பட்டா பெற உரிமை கிடையாது என்றால் சரியல்ல. ச.எண்.4.1 நிலமானது 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் வைத்திகவுண்டர் என்ற பொன்னப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சொத்துக்கள் அனைத்திற்கும் என் தகப்பனார் பெயருக்கு தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டதே தவறு என்றால் சரியல்ல. என் தகப்பனார் ச.எண்.4/1 இ , ச.எண்.4/1சி நிலத்திற்கு என் தகப்பனார் பெயருக்கு எந்த மூலத்தின் ஆவணத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை நிருபிக்கும் வகையில் அந்த மூல ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். 27.01.1972ல் என் தந்தைக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் நிலத்தை மொத்தம் உள்ள 5 1/2 ஏக்கரில் 2 1/2 ஏக்கர் நிலத்தை குதவை செய்து கொடுத்திருந்தார் என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் மூல ஆவணம் எதுவும் இன்றி கொடுத்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளது. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண்.1431 மூலமாக

சின்னு என்கிற வைத்தியகவுண்டர் என்கிற பொன்னப்பன் என்பவருக்கு D card பட்டா மூலம் கிடைக்கப்பெற்ற தனிப்பட் சொத்து அவருடைய காலத்திற்கு பிறகு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. பட்டா வழங்கப்படுவதற்கு முன்பே என் இரண்டு தாத்தாக்களும் அனுபவம் செய்துள்ளார்கள். மேற்படி சொத்துக்கள் 26.05.2008 லிருந்து என் அப்பா அவருடைய சகோதரிகள் மற்றும் தாயாரிடம் இருந்து போலியாக ஒரு விடுதலைபத்திரம் எழுதி வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. அந்த போலியான விடுதலைப் பத்திரத்தின் படி என் அப்பா என் பெயருக்கு 18.10.2012 ல் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றும் அந்த செட்டில்மெண்ட் பத்திரமும் போலியானது என்றாலும் சரியல்ல. போலியான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நான் போலி பட்டா பெற்றுக் கொண்டு தாவா சொத்தில் மோசடியாக தடவழி பாத்தியம் கேட்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.